**Judicial Form No.53**
**( See Rule 42 )**
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**
**Case No. CC.NO. 303/2022**
**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 5 Page.No.**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01 ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.5 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பிரபவராணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மதுசூதனன் | தொழில் | மருத்துவர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 38 |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 1st day of August 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.05.2022 ம் தேதி நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது அன்றையதினம் காலை 11.20 மணிக்கு ஆனந்தன் என்பவர் 60 வயது

மதிக்கத்தக்க தன் தந்தை சுப்பிரமணி த/பெ பெருமாள் என்பவரை சுண்டம்பட்டி கிராமத்தில் இருந்து சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்ததில் தன்னை தெரிந்த 2 ஆண் நபர்கள் 26.05.2022 அன்று காலை 10.15 மணிக்கு தன் வீட்டருகே வைத்து தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது முழங்கையில் வீக்கம் காணப்பட்டது. அவருக்கு கை அசைக்க முடியாத நிலைமையில் இருந்தது.
2. இடது கண்ணத்தில் 0.5x 0.5 செமீ அளவில் சிராய்ப்பு காயம்

பின்பு அவர் கிருஷ்ணகிரி தனியார் மருத்துவமனையில் மேல் சிகிச்சை சபெற்றுக்கொண்டார். அவரை பரிசோதனை செய்தபோது அவரது வலது கையில் உள்ள அல்னா எலும்பில் முறிவு இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதிக்கபட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு வலது கையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து நான் அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 1ம் காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். (**அந்த காயச்சான்றிதழ் மற்றும் அ.சா.ஆ.3 குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக ஒரு நபர் பள்ளத்தில் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அந்த காயங்கள் நான் பரிசோதனை

செய்வதற்கு முந்தைய நாள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. நாட்றம்பள்ளி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்தேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நான் அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். அவர் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். நான் காயம்பட்டவருக்கு முதலுதவி மட்டும் செய்துள்ள நிலையில் கொடுங்காயத்தை பொறு த்து நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. நான் சரிவர சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும், அவருக்கு வழங்கப்பட்ட சான்று ஏற்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.